987

Regd. No. M. 878.

பூர்ணசந்திரோதயம்.

பிரம்மஞானம், மதம், சாஸ்திரம், கலை நாகரீகம் இவைகளைப்பரவச்
செய்யும் ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தொ. 13 1922௵ அக்டோபர், நவம்பர்மீ ப. 6, 7.

...ஸாமி ஐயர் பி. ஏ., பி. எல். பத்திராதிபர்:

...ர விக்டோரியா புத்தியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

2476

விஷய அட்டவணை.

1. தற்கால நிலைமை. 121

2. கவீந்த்ர கேசரி 225

R. S. அனந்த நாராயணையர்.

3. பிரஹ்மஞான பிரதமதத்துவங்கள். 129

A. ரெங்கசாமி அய்யர் B. A. B. L.

4. மக்களைப் பெருதலும் அவர்களைப் பழக்குதலும் 135

R. பஞ்சாபகேசய்யர்

5. அருளுடைமை 138.

R. ரெங்கசாமி அய்யர் B. A.

6 யாளி. 143

M. S. சுந்தரசர்மா B. A.

7. அவதாரங்கள். 148

பூர்ணசந்திரோதயம் முந்திய வால்யூமகள் தேவையுள்ளவர்கள் எங்கள் ஆபீசுக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம் விலை ரூ 2. சில பிரதிகள் குறைந்த வால்யும்கள் விலை இல்லாமல் இனாமாகக் கொடுக்கப்படும் தேவையுள்ளவர்கள் தபால் சார்ஜுக்கு மட்டும் கட்டணம் செய்ய வேண்டும்.

தபால் சார்ஜ் உள்பட வருஷச்சந்தா இந்தியாவுக்கு 2—0—0
அன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா

மானேஜர்

பூர்ணசந்திரோதயம்.

Hall of Theosophy, MADURAI

மதுரை.

12 JUN 1923

பூர்ணசந்திரோதயம்

தொகுதி	துந்துபி௵ ஐப்பசி, கார்த்திகைமீ	பகுதி
13	1922௵ அக்டோபர் நவம்பர்மீ	6,7

தற்கால நிலைமை.

ஸ்ரீமான் சர். டி. சதாசிவய்யர் அவர்கள் போன வருஷம் போல் இவ்வருஷமும் தென்னாட்டிலுள்ள அநேக விடங்களுக்குச் சென்று ஆங்காங்கு பிரசங்கங்கள் செய்துவந்தார்கள். பரமக்குடி, திண்டுக்கல், இராஜபாளையம், கடம்பூர் முதலிய விடங்களில் அவர் வரும் சமயத்தில் கான்பரன்ஸுகள் ஏற்பட்டு நடைபெற்றன. ஆங்கில மரியாதை வெகு ஜனங்களுக்கு நல்லறிவு ஊட்டி வருகின்ற அவரது வாழ்வு என்றென்றும் நீடித்திருக்கும்படி பிரார்த்திக்கிறோம்.

***

கடம்பூரில் ஸ்ரீமான் பஞ்சாமி தேசய்யருடையவும் அவரது நண்பர்களுடையவும் ஒத்தாசையால் தென்னாட்டில் உதயதிசை நக்ஷத்திர சங்கத்தின் ஒருவருஷ உத்சவசபை கூடி வெகு விமரிசையாய் நடையேறிற்று.

பகவான் வருங்காலம் நெருங்கி விட்டபடியால் இப்படிக் கொத்த கூட்டங்கள் அடிக்கடி நடத்தி எல்லோரையும் தயார் செய்வது மிகவும் மேன்மையான வேலை.

***

சென்ற நவம்பர் மாதம் திருநெல்வேலியில் தென் தமிழ் பிரஹ்மஞான கான்பரன்ஸ் நடைபெற்றது. அவ்வமயம் டாக்டர் பெசண்டு அம்மாள் அக்கிராஸனம் வகித்தார். தென்னாட்டில் பலவூர்களிலிருந்து அங்கத்தினர்கள் வந்திருந்தார்கள். திருவனந்தபுரம் ஸ்ரீமான் R. சீனிவாசய்யர் ஓர் இரவு காதாகாலட்சேபம் நடத்தினார். வந்திருந்த பேர்களிலும் சிலர் பிரசங்கம் செய்தார்கள். திருநெல்வேலியில் பிரதானமாயுள்ள இருவர் புதிதாக பிரஹ்மஞான சபையில் சேர்ந்தார்கள்.

***

இவ்வருஷம் டிசம்பர் மாதக்கடைசியில் பிரஹ்மஞான கன்வென்ஷன் அடையாற்றில் நடைபெறும். தமிழ் நாடுகளிலுள்ள அங்கத்தினர் யாவரும் அங்கு சென்று ஆனந்த மடைவார்களென்று நம்புகிறோம். இவ்வருஷம் புதிதாக கன்வென்ஷன் காலத்தில் சிற்பசித்திரக் கண்காட்சி மாதுஸ்ரீ அடேர் என்பவர்களின் ஊக்கத்தினால் நடைபெறுகின்றது. டிசம்பர் மாதம் 23 தேதி முதல் 30௳ வரையில் காட்சி நடைபெறும் என்று தெரியவருகின்றது. இனி வருஷந்தோறும் இம்மாதிரியான காட்சி நடைபெற்று நமது இந்தியாவிலுள்ள அபூர்வவேலைகளெல்லாம் வெளியிட்டுத் திரட்டி அடையாற்றில் ஓர் சித்திரக்காட்சி சாலை ஏற்படுமேயின் அது மிகவும் எல்லோருக்கு சந்தோஷத்தை தரக்கூடியது. சிற்பசித்திரங்களில் அன்புடையோர் தமது பொருளுதவி செய்து காட்சியில் காணும் சிலவற்றை வாங்கி அடையாற்றில்

ஞாபகக்குறியாய் வைக்க முயலவேண்டும்: அப்படிச் செய்தால் சில வருஷங்களுக்குள் மிகுந்த பொருள்கள் சேர்ந்து விடும். அந்நிய நாட்டிலிருந்து அங்குவரும் நமது சகோதரர்களும், நம்நாட்டில் அங்காங்கிருந்து வரும் சகோதரர்களும் அவைகளைக்கண்டு சந்தோஷமடைவதோடுகூட நமது நாட்டின் மகிமையை மறவாது கண்முன் எப்பொழுதும் நிற்கச் செய்யும்.

***

ஸ்ரீமான் C. ஜினதாஸராஜரும் அவரது அன்பார்ந்த மனைவியும் ஆஸ்ட்ரேலியாவிலிருந்து திரும்பி வந்து இலங்கையில் சில நாள் அங்குமிங்கும் பிரசங்கங்கள் செய்து பிறகு தென்னாட்டில் வெள்ளத்தின் கொடுமையால் ரயில் செல்லாததினால், சில நாள் அவ்விடமே தங்கி, டிசம்பர் மாதம் 15உ யன்று சென்னை வந்து சேர்ந்தார்கள்.

***

B. P. வாடியா அவர்கள் நமது சபையினின்று ராஜீனமா கொடுத்து விட்டார்கள் அப்படி செய்தது மல்லாமல் நமது சபையைப்பற்றியும் சபையில் தலைமை பூண்டவர்களைப் பற்றியும் அவதூராய் நீண்ட கடிதமெழுதி பிரசரம் செய்து எனையோருக்கும் அனுப்பி யிருக்கிறார்கள். அவர் அவ்விதம் செய்தது அநேகருக்கு ஆச்சரியமாயிருக்கலாம். ஆனால் அவருடைய கடிதத்தை நன்றாய் வாசித்துப் பார்ப்பவர்களுக்கு அவர் செய்தது அப்படித்தோனாது. எனெனில் மிகக்குழந்தை தனமாய் முற்றி பெழுதியதை பிந்தி மறந்து சில விடங்களில் அகங்காரத்தினால் மயங்கி இன்னது எழுதுகிறோமென்று யறியாமல் எழுதுகின்றார் அவர் கடிதத்தைப் படித்த பிறகு அக்கடிததிற்கு பதிலாக நமது கிருஷ்ணமூர்த்தியார் டிசம்பர் மாதத்து தியாசபிஸ்டில் எழுதி யிருப்பதை வாசிப்பது

கட்டை வண்டியில் கரடுமுரடான ரஸ்தாவில் சென்ற பிறகு திடீரென்று மோட்டாரில் நல்ல ரஸ்தாவில் செல்லுகிறது போலத்தோன்றுகிறது.

***

உண்மையான ஹிந்துமத தத்துவங்களை அறிந்து இக்காலத்திற் கேற்ப நடிக்கும் பொருட்டும், சற்குணங்கள் பொருந்தி ஹிந்து மதத்திற் சேர விரும்புவோரை அங்கீகரித்துக் கொள்வதற்கும், ஹிந்து மதத்திலிருந்து அந்நிய மதங்களிற் சேர்ந்து திரும்பி ஹிந்து மதத்திற்கு வர விரும்போரை சேர்த்துக்கொள்ளவும், முதலானவைகளை கொண்டு செலுத்துவதற்காக பாரத ஸமாஜம் ஒன்று அடையாற்றில் ஏற்பாடாகி நடந்து வருகிறது. இதற்கனுகூலமாக ஓர் மாதாந்திரப் பத்திரிகை பாரததர்மம் என்று அக்டோபர் மாதம் துடங்கி வெளிவருகிறது. ஸ்ரீமான் ஏ. மகாதேவசாஸ்திரியார் அதற்கு பத்திராதிபர், பாரத சமாஜத்திற்காக அடையாற்றில் ஓர் ஹிந்து மதக்கோவில் கட்டுவதாக உத்தேசித்து பொருளுதவிக்காக விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். மிகவும் மேன்மையான காரியமாகையால் எல்லோரும் தம்மால் இயன்றவளவு உதவி புரியவேண்டும், ஸ்ரீமான் C. சுப்பராமய்யர் பாரத ஸமாஜம் பொக்ஷதார் அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

M. S. சுந்தரசர்மா.

நவநீதகேசரி.

நீர்வளம் நிலவளம் நிறைந்த இத்தாலியா நாட்டில் அன்டோனியோ கனோவா என்ற பெயருடைய ஒரு சிறுவனிருந்தான். அவன் கல்கொத்து வேலை செய்து வந்த தனது பாட்டனது வீட்டில் வளர்ந்து வந்தான். இவர்கள் எளியவர்களே யாயினும் சாப்பாடிற்குக் கஷ்டப்பட்டதில்லை.

கிழவனுக்கு அன்டோனியோவிடம் பிரீதி அதிகம். ஆதலால் அவனை வெகு அன்புடன் வளர்த்து வந்தான் இவன் தனது பேரப்பிள்ளையின் மூலமாகத்தன் வம்சம் கீர்த்திபடைய வேண்டுமென்று கருதித்தன்னாலியன்ற மட்டும் அவனை விருத்திக்குக் கொண்டுவரத் தீர்மானித்து அவனுக்குக் கல்கொத்திவேலையே அப்பியாஸம் செய்து வைக்கக் கருதி முதல் முதல் சித்திரம் கற்பித்து வைத்தான், இது அன்டோனியோவுக்கு பிரியமாகவே யிருந்தது. அவன் வெகு சீக்கிரத்தில் அபாரஞானமும் சக்தியுமுள்ளவனாகிய விளங்கினான். முதன் முதல் களிமண்ணால் புஷ்பங்களும் பக்ஷிகளும் வெகு நேர்த்தியாகச் செய்து முடித்தான். இவற்றைக் கண்ணுற்ற இவனது பாட்டன் மிகவும் மகிழ்ந்தானெனினும் கல்கொத்து வேலையில் இவன் அதிகப்பிரஸித்தி பெறுவான்! என்று நினைத்தானேயொழிய, கேவலம் கல்கொத்தியின் பதவிக்கும் மேலான பதவியை யடைவானென்று அவன் நினைக்கவில்லை. இவன் "விளையும் பயிர் முளையிலே" என்னும் பழமொழியைக் கேட்டிலன் போலும்!

கிழவனும் அவனது பேரப்பிள்ளையும் இவ்வாறு சுகமாகக் காலங்கழித்து வருகையில் ஒருநாள் ஒருதனவான் கிழவனிடம் வந்து தன் வீட்டில் ஒரு விருந்து

நடக்கப் போவதாகவும் விருந்தினர்க்கு பகிழ்ச்சி யுண் டாக்கத்தக்க அபூர்வமான பொம்மையொன்று செய்து கொடுக்க வேண்டுமென்றும் சொல்லிப்போனான். அவன் தனக்கு வேண்டிய பொம்மை இன்னமாதிரி இருக்க வேண்டுமென்று சொல்லவில்லை. அவனுக்கு வேண்டிய தெல்லாம் ஒரு பொம்மை. அது நூதனமாகவு மிருக்க வேண்டும்.

கனவான் பொம்மை செபயச் சொல்லிப் போய்ச் சில தினங்கள் கழிந்தன. அதைக் கொடுக்கவேண்டிய கெடுவும் நெருங்கிற்று. கிழவன் அது விஷயமாய் ஒன் றும் செய்யாமலே யிருந்து விட்டான். கெடுவுநெருங்க வே, இன்னது செய்வதென்று தெரியாத வனுய்க்கவலை யுடன் உட்கார்ந்திருந்ததைக் கண்ட அவனது பேரனு கிய அன்டோனியோ, அவனருகிற் சென்று "தாத்தா" தங்கள் ஏன் கவலைப்படுகின்றீர்கள்! நமது எஜமானனை நான் இதோ ஒரு நொடியில் சந்தோஷப்படுத்தி விடுகி றேன்; கொஞ்சம் உறைந்த வெண்ணெய் மாத்திரம் கொடுங்கள். அதைக்கொண்டு ஒரு சிங்கம் செய்கின்றே "என்றான். இதைக்கேட்ட கிழவன் இது நல்ல யோசனை தான்! "என்று சொல்லிக்கொண்டு உடனே வெண்ணெய்ப் தருவித்தான். அன்டோனியோவும் உடனே வேலை செய்ய ஆரம்பித்தான். சிறிது நேரத்திற்குகெல்லாம் ஒரு சிங்கத் தின் தலையும், அதன்பின் தோள்வரை வீசும் பிடரிமயி ரும், பொன் பொன்ற வெண்ணெயினின்றும் வெளிவந்தன பின்பு சிங்கத்தின் உடலும் மற்ற அவயவங்களும் ஒவ் வொன்றுப் வெளிவந்தன. அன்டோனியோவின் வேலை யைச் சிறிது தூரத்தி லுட்கார்ந்து பார்த்துக் கொண்டி ருந்த கிழவனுக்கு அப்போது உண்டான ஆனந்தத்திற் களவேயில்லை.

இந்த வெண்ணெய்ச் சிங்கம் கனவானது மாளிகையில் ஒரு மேஜையின் மீது வைக்கப்பட்ட பொழுது அதைக்

கண்ணுற்ற ஒவ்வொருவரும் அகமகிழ்ந்து, 'அதைச் செய்தவன் ஒரு சிறுவன்" என்றறியவும், ஆச்சரியப் பட்டு அவனைப் பார்க்கவேணுமென்று ஆவல் கொண்ட னர். உடனே கனவான் அன்டோனிபோவை வரவழைத் தான். அவனைக் கண்ணுற்றவர் அவன் வேலைத்திறனுடன் குணவானாகவும் இருந்ததைக்கண்டு மிகவும் சந்தோஷித் தனர். அவனுடைய நடை உடை பாவனைகள் அவனைக் கண்டோர் எல்லோருக்கும் இன்பத்தை விளைத்தன. அவர்கள் இவனை வியந்து கொண்டாடிப்பேசி இவனு க்கு மிக்க ஆனந்தத்தை விளைவித்த தேனும் இவன் வெகு அடக்கமாகவே யிருந்தான்.

பலீரிபோ என்ற கனவான் அன்டோனியோவின் புத்திசாலித்தனத்தை யறிந்து அவனுக்கு உயர்தரக் கல்விகற்பித்தும் வேறு விதமாகக வேண்டிய உதவிகளும் செய்து அவனுக்கு அரிய நண்பனுயினுன். இந்தகன வானது உதவியாலும் தனக்குக் கிடைத்த வேலைகளைப் பொறுமையுடனும் சலிப்பில்லாமலும் செய்து வந்ததினு லும் அன்டோனிபோ லோகப் பிரஸித்திபெற்ற சிற்பிக ளில் முதல்வனுனுன்.

இதைப்படிக்கும் எனது நண்பர்களே, அன்டோனி போவின் அபிவிர்த்திக்கும் புகழுக்கும் காரணமாயிருந் தது அவனது வேலைத்திறனும் விடாமுயற்கியுமே யல்லவா?

செய்வன திருந்தச்செய்.

S. R. Anantanarayana Aiyar



விளக்கம் 10.



விளக்கம் 11.

பிரஹ்மஞான பிரதம தத்துவங்கள்.

(A. ரெங்கசாமி அய்யர் B. A. B. L)

112ம் பக்கத் தொடர்ச்சி

பரம்பரையிலிருந்து சில சந்தர்ப்பங்களில் உயிர் பரிணாமத்தின் பரப்பரை பிரத்தியேகப்படுகிறதென நன்கு கவனிக்கத்தக்கது. பிண்டஜ பிராணிகளும் பறவைகளும ஊரும் பிராணிகளின் ரூபங்களுலிருந்து பரிணமித்திருக்கிற விஷயமே உடல் ரூபங்களின் மூலம் பொதுவென ரூபிக்கின்றது. கடல் புற்களும் பங்கசம் (Fungi) புற்களும், பாசங்களும், நீரில்வாழும் ஏகபித்து (unicellular) ரூபங்களிலிருந்து தோன்றும் பொதுப்பரம்பரையில் சேர்ந்தவைகளாயிருப்பினும் உயிரானது நான்கு வெவ்வேறு பிரவாகங்களாக பரிணமித்திருக்கின்றது. அதுபோல் பறவைகளும் பிண்டஜ பிராணிகளுக்கும் ஸ்தூலசரீர மூலம் பொதுவாயிருப்பினும், பறவைகளின் உயிரானது பின் வருங்காலத்தில் தரையில் வாழும் யக்ஷ கணங்களில் புகுந்து பிறகு கின்னரகிம்புருஷ தேவர்களில் படிப்படியாய் பிரவேசிக்கிறது. ஆனால் பிண்டஜ பிராணிகளின் உயிரானது மானிட வர்க்கத்தில் பிரவேசிக்கின்றது.

தரை கடல் இவைகளின் ஆழ்ந்த பிரதேசங்களில் வாழும் திரவியத்தால் அமைக்கப்பட்ட ரூபங்களை விசாரிக்கும்கால் நாம் கவனிக்கவேண்டியது யாதெனில் ஆகாய திரவிய ரூபமானது கெட்டியான பாறையிலும் கட்டிலும் வசிக்கலாம் அவைகளை ஊடுருவிச் செல்லலாம் காற்றானது கட்டைக்கும்பலிலும் மரத்துண்டுகள் மத்தியில் உள்ள வெளிப்பிரதேசங்களிலும் ஊடுருவிச்செல்வது போலாகும். நம்முடைய அதிககெட்டியான வஸ்துக்களிலும் ஆகாய திரவியங்கள் ஊடுருவிச்செல்லக்கூடிய இடைவெளிகள் உள. இவ்வித திரவிய ரூபங்கள் பூமிகடல்களின் மத்திய பிரதேசங்களில் வாழத்தடையில்லை. சாதாரணமாய் இப்பூலோக பிராணிகளுக்கு அதிக உஷ்ணத்தினாலும் வாயுபாரத்தினாலும் (atmospheric pressure) ஜீவித்திருப்பது சாத்தியமன்று, ஆனால் அத்திரவியரூபங்கள் இவைகளினால தடைபடா.

மானிடவர்க்கத்தைத் தனித்துப்பார்க்கினும் அதே மாதிரிஉயிரின் பொதுவேறுபாடுகாணப்படுகிறது (விளக்கம் 10) பின்னால் மனித வர்க்கமாக ஜெனிக்கும் உயிரானது ஆரம்பத்தில் பூதசாரம், தாது ஒஷதி வர்க்கங்களில் பிரவேசிக்கும் காலத்திலேயே சில விசேஷ லக்ஷணங்களை லேசாக காண்பிக்கின்றது. பிராணி வர்க்கத்தை அடையும்போது இவைகளை தெளிவாய் நாம் காண்கிறோம். பின் மனித வர்க்கமாகும் உயிரில் 7 பிரதம பிரகாரங்கள் உள. ஒவ்வொன்றும் மற்றவர்களுடைய சம்பந்தத்தால் சில மாறுதல்களை அடைகின்றது. மாணிடவர்க்கத்திற்கு முன்னுள்ள எல்லாவர்க்கங்களிலும் இம்மாறுதல்கள் நீடித்து நிற்கின்றன. நாய்களுடைய உயிரானது பூனைகளுடைய உயிரைக் காட்டிலும் எப்போதும் வேறானது. அவையிரண்டினின்றும் யானையின் உயிரானது வேறு. நாய் உயிர் ஒநாய் நரி முதலிய சவான பிரகாரத்தைச் சேர்ந்த ரூபங்களில் பரிணமித்து கடைசியாக வீட்டுநாய் ரூபத்தில் மேன்மையைப் பெறுகின்றது. பூனை குதிரை யானை, குரங்கு முதலியபிரகாரங்களைச்சேர்ந்த பிராணிகளின் உயிர்களின் முன் ஜென்மங்கள் தத்தம் விபாகத்தைச்சேர்ந்த பிராசீன காலத்தியதுஷ்டபிராணிகளாம். (இந்த விஷயம் பரிணாமம் என்ற 7வது அத்தியாயத்தில் விவரிக்கப்படும்)

இந்த பிரகாரங்கள் மனிதவர்க்கத்தில் தோன்றுவதை நாம் ஆராய்ந்து நோக்கின அம்மாணிட வர்க்கதின் தோற்றமானது ரமணீயமாயிருக்கின்றது.

சவான உயிரானது மாணிடவர்க்கத்தில் பிரவேசித்து பக்தியுள்ள ஜீவபேதமாக விளங்குவதை நாம் எளிதில் தெரிந்துகொள்ளலாம். 11வது விளக்கத்தில்வகுக்கப்பட்டிருக்கும் பாகுபாடு நிச்சயமென்றுகூறத்தக்கதன்று. மனுஷ்ய மனோபாவ வேறுபாடுகளின் மர்மங்கள் அப்பாகு பாட்டி

னால் நிஷ்களங்கமாய் தெளிவுசெய்யப்படுகின்றதென்று சொல்லவொண்ணாது. ஆனால் அவைகளை ஒருவாறு அறிவதற்கு உபயோகமாயுள்ளது. ஏழு பிராகாரங்கள் தெளிவாய் ஏற்பட்டுள்ளன. ஒன்று மற்றொன்றைக்காட்டிலும் சிலாக்கியமென்றாவது அல்லது உயர்ந்ததென்றாவது, சொல்லவொண்ணாது. பரிணாம நாடகத்தில்இவையெல்லாம் வேண்டுவதுதான். அவைகளில் ஒவ்வொன்றும் ஈசுவரனால் சங்கற்பித்தபடி ஓரே தெய்வீகமான உயிர், சேதனம், இவைகளின் விகாசத்திற்கு தத்தம் இயல்பை அளிக்கின்றகாரணத்தினாலே சிரேஷ்டமென்றே சொல்லத்தகும்.

சமத்துள் வசிக்கும் பக்தர்களை நாம் ஆராய்ந்து நோக்கின் அவர்களில் சிலர் மனசாலும் ஸ்பூர்த்தியாலும் ஈசுவரன் நேரே நோக்கிச் சொல்லுவதாகவும் மற்றும் சிலர்களுக்கு யேசுகிறிஸ்து ஸ்ரீ கிருஷ்ணபகவான் முதலிய மத்தியஸ்தமாய் நிற்கும் அவதாரமூர்த்திகளை தியானம் செய்தாலன்றி ஈசுவரன் என்கிறது தெளிவுபடுகிறதில்லையென்றும் காண்கிறோம். சிலபக்தர்கள் அலைபோன்ற பக்தி பரவசத்தால் அதிக்கிரமிக்கப்படுகிறார்கள். அப்போது உயிரை தியாகம் செய்யவிரும்பும் மனோ பாவம் அவர்களுக்குஉண்டாகிறது அம்மனோபாவத்திற்கு டம்பம் அல்லது அகங்காரம் காரணமல்ல பக்தன் நாடகத்தில்நடிப்பது போலபக்தி எப்போதும் இராவிடில் அப்பக்தி உண்மையல்லவென்று கருதுகிறான். டால்ஸ்டாய்(Tolstoi) என்பவரின் தாத்பரியத்தில்ஈசுவர பக்தியும் கிறிஸ்துபோல ஒழுகும் இச்சையும் ஏழைகளோடும் ஆதுரர்களோடும் பகிர்முகமாய் ஒருவனை ஏபோவம் செய்கின்றது. அவன் நாடகத்தில் நடிப்பதுபோல ஆகின்றவன். கிறிஸ்து ஒழுக்கம் இவ்வித ஜீவர்களுக்கு நாடகீயமாகச் செய்தாலன்றி உண்மையாகாது.

அன்புடன் கூடிய ஜீவனர்களிலும் அநேகவேறுபாடுக

கள் உள. சிலஜீவர்கள் ஒருவரிடமே அவர்களது அன்பு முழுவதையும் காட்டுகிற்கின்றனர், அவ்வித ரோமியோஜூலி யெட் (Romeo Juliet) போன்றவர்கள்க் அன்பருக்காக எல்லாவற்றையும் தியாகம்செய்ய ஆயத்தமாகவிருக்கின்றார்கள் இன்னும்சிலர் தங்கள் அன்பை ஓரே இடத்தில் செலுத்தாமல்விரிவாக பெற்றோர் பின்ளை நண்பரென்று பலர்களிடம் காட்டி பரோபகார பிரவர்த்திகள் பற்றுள்ளவர்களாய் இருக்கின்றனர்.

நாடகிய பிராகாரத்தைச் சார்ந்த ஜீவர்களில் முன் சொன்ன ஒருவகுப்பார் விநோதமாயிருப்பினும் பெரும்பாலும் சரியாய் மதிக்கப்படார். நாடகத்தில் ஒரு சாக்ஷி போல் அவர்கள் நடித்தாலன்றி அவர்கள் துவாழ்க்கை உண்மையென்று அவர்கள் கருதார்கள். தான் ஒருநாடகத்தில் நடிப்பவன்போல் தோன்றுவிடின் சுகத்தைச் சுகமெனக்கருதார். கண்ணீர் விட்டழுதாலொழிய அவர்வனுக்குதுக்கம் துக்கமாகாது. அவர்களில் ஒருபகுதி ஜீவர்கள் நாடகத்தில் சேர்ந்த வாழ்வை அகம்புறம் (Self and not self) என இருவிதமென துமதிக்கிறார். மற்றப்பகுதிஜீவர்வாழ்வை ஞானநெறியில் நோக்கி நாடகிரந்தங்களை உண்டுபெண்ணுகின்றனர். நிர்வாக இயல்போடு கூடின நாடகிய ஜீவர்கள் வீரர்களாகவும் ராஜகீயதலைவர்களாகவும் ரமிக்கின்றனர். சாஸ்திரீய பிராகாரத்தன்மைவர்ஸூத்ராத்மகர் (theoretical) என்றும் பரீக்ஷாத்மகர (expreimental) என்றும் இருவிதமாதக் காணப்படுகின்றனர் மூன்றுவது அவர்களில் பக்திசுபாவமுள்ளவர்களை தற்காலத்தில் காண்பது அரிது. அவர்களுடைய இயல்பு சாஸ்திரீய ஆராய்ச்சிகளில் மிகுந்த ஆஸ்தையுடன் கூடியிருப்பதோடு பிரபஞ்சமானது ஈசுவரனின் உறைவிடம் என்ற சதா உணர்ச்சி இருத்தலாகும்; தன்னுடைய முறைகளில் விநோதமாய் விளங்க விரும்பும் சாஸ்தி

ரக்ஞனது இயல்பு நாடகீய பிரகாரத்தால் ஆக்கிரமிக்கப்படுகின்றது. அவனுடைய நடத்தையால் அவன் டாம்பீகனென்றாவது அக்ராஸனத்தைக் கோறினவன் என்றாவது நினைக்கவொண்ணாது. அவன் சுபாவமான இயல்பை அனுஷ்டிக்கிறானல்லாது வேறில்லை.

நிர்வாக வகுப்பில் நடிக்கும் இயல்பானது அநேகராஜகீய தலைவர்களிடம் காணப்படுகின்றது. மற்றொரு இயல்பு ஓஜஸோடு (magnetic) கூடியது, அதிகாக்ஷியை விரும்பாமல் காரியம் சாதிக்கப்பட்டால் போதுமென்று கருதி ஆதீனமாயுள்ளவர்களிடத்தில் பரம விசுவாசத்தை உண்டுபண்ணிக்கொண்டு தான் பின்வாங்கி நிற்கக் கருதும் தத்துவ விசார இயல்பை (Philosophic) ப்பற்றி அதிகமாய் சொல்லவேண்டுவது இல்லை: வெவ்வேறு தத்துவ விசாரர்களுடைய வாழ்க்கை விசாரங்களில் பேதமுறைகள் காண்பது ஈசுவரனின் அம்சம் அவர்களிடத்தில் வெவ்வேறு இயல்பாகப்பரிணமிக்கும் தன்மைபற்றி தான். ஹெர்பெர்ட்ஸ்பென்ஸர் (Herbert Spencer) ஹீகல் (Heackal) ரஸ்கின் (Ruskin) கார்லைல் (Carlyle) அரிஸ்டாடில் (Aristotle) பிளேடோ (Plato) ஸ்பிஞோசா முதலாயினோர் இந்தக்கிரணத்தின் சிலவேறுபாடுகளுக்கு திருஷ்டாந்தங்களாம்.

மற்றொரு இயல்பினர்களை அநேகர் சரியாய் அறியார். அவர்களுக்கு சங்கேதம் (Symbolism) உரித்தானது. வாழ்க்கையானது இவர்களுக்கு உவமை யற்றிருந்தால் உண்மையல்ல. இதற்கு தீர்க்க தரிசனத்திற்கு (allegory) கர்த்தாவாகிய டேவான் ஒரு திருஷ்டாந்தம். அவர் சங்கேதங்களிலும் உவமைகளிலும் ரமிக்கின்றனர். இவ்வியல்பினுடைய ஒருவேறுபாடு கிரமமன்றி (ritual) மதமானது உண்மையன்று என்று நினைப்பவர்களிடம் காணப்படுகிறது. ஆடைகள் (Vestments) கோலங்கள் (Processions) வாஸனைகள்

(incense) நமஸ்காரங்கள்முதலியன அவர்களுடைய ஆராதனையின் லக்ஷணமாம்.

பலவழிகளில் ஈசுவரன் பொதுப்பிரவிர்த்தியில்தனக்கு உதவிபுரிய ஆன்மாக்களை பழக்குகிறார். அவருக்கு எல்லோரும் ஸமம். ஒவ்வொருவருக்கும் மார்க்கம் விட்டிருக்கிறார். ஒவ்வொருவரும் அவரவரது வழியில் சென்று மற்றவர்களோடு அன்னியோன்யமாய் நடப்பதே நன்று.

இவ்விஷயம் ரமணீயமானது. உயிர் பரிணாமத்தைப் பற்றி ஒருவாறு கூறியுள்ளோம் அதை சூசனையாககொண்டு இன்னும் மென்மேலும் மனனம் செய்து கவனித்து பார்த்திடல் ஞானம் அதிகரிக்கத்தக்கது.

இவ்விதமாக மிருக ஷீரிஷத்தை ஆரம்பமாக கொண்டு மனுஷனை இறுதியாக நோக்கி சிருஷ்டியை விரைவாக பார்க்கின் வஸ்து இநேகமாக மாறி நிற்கும் பரிணாம பிரவாகம் ஸதா ஓடிக் கொண்டுருப்பது நன்குவிளங்கும். அவ்வநேகம் தனக்காக மட்டும் உழைத்து நிற்கும் பலவிஷயங்கள் சேர்ந்த அநேகம் அல்ல. ஒவ்வொன்றும் தன்னுடையமுன்னேற்றமானது மற்ற ஒன்றுக்கு உழைப்பதை ஆசிரித்து நிற்கின்றதென்று மெள்ள மெள்ள சாக்ஷாத்கரிக்கின்றது. அந்த பல ஒன்றுகள் அடுத்து அடுத்து வைக்கப்பட்ட ஒரே மாதிரியான பலஒன்றுகள் அல்ல. ஆனால் ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்டு ஒன்றை ஒன்று ஆசிரித்து நானாவித பாகங்களோடு கூடிய ஒன்றே ரூபபரிணாமத்திற்கு ஆதாரமாம். ஓரேமனோபாவமல்ல, ஓரே மதமல்ல, ஓரே ஆராதனையல்ல, பலமனோபாவங்கள் பலமதங்கள் பல ஆராதனைகளான கைங்கரியங்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாட்டை நாம் சாக்ஷாத்கரிக்கும்படி செய்வது அவருடன் நம்மை ஒத்துழைக்கச் செய்கின்றன. இது தான் எப்போதும் உயிர் பரிணாமத்தின் ஆதாரமாய் நிற்கின்றது.

தற்காலத்தின்மகத்துவம்

1. பண்டையுலகிற்கோர் கௌரவம் பலவிதங்களிலேற்பட்டதுபோலவே, தற்காலவுலகிற்கும் ஓர் தனிச் சிறப்புளதென்ற உண்மையை எவரும் மறுத்தல் இயலாது. உலகிலுள்ள தேசங்கள் பலவற்றுள்ளும் தீவிரமான சுவதந்திரக் கிளர்ச்சி தோன்றியுள்ளதை நாம் கவனிக்குமிடத்து இதனையோர் நற்சகுனமென்றே கருதவேண்டிவருகின்றது. பிரதி தேசத்திலும் ஆண்மக்கள் பரிபூரண சுதந்தரமடைய விரும்புவதுபோல் பெண்மக்களும் உலகெங்கும் ஆண்மக்களிடமிருந்து தமதுபரிபூரண உரிமைரியைப்பெற பெருமுயர்ச்சி செய்து வருகின்றனரென்பது கவனிக்கத்தக்கது. அதனோடு உலகிலுள்ள வல்லரசுகள் ஏறக்குறைய ஒழிந்து, பலநாடுகளிலும் ஜனநாயக வியக்கம் பரவிவருகின்றது.

2. நான்கு ஆண்டுகட்கு முன் வரை நிகழ்ந்த ஐரோப்பிய போரின் பயனாய் சாமானிய காலங்களில் நாம் அலட்சியஞ் செய்துவந்த பல பெருங்கிளர்ச்சிகள் வெளிச்சத்திற்கு வந்தன. இப்போர் அவற்றிற்கோர் பலத்தையும் அளித்தது. யுத்தகாலத்தில் ஐரோப்பா கண்டத்திலுள்ள பலதேசத்து வாலிபர்களும் நடுவயதுள்ளவர்களும் போர் முனையிற் சென்று யுத்தம் செய்தனர். லட்சக்கணக்கான போர்வீரர்கள் அப்பொழுது மரணமடைந்தனர். பல்லாயிரக்கணக்கானோர் காயம்பட்டனர். போர்முனையிற் செல்லாதார் பலரும் பலவிததுன்பங்களெய்தினர். அக்காலத்தில் நாட்டைப்பரிபாலனஞ் செய்யுமாறு பெண்மக்களும் வயோதிகர்களும் இளஞ்சிறுர்களு மாத்திரமே யெஞ்சி நின்றனர். நாட்டின் வருங்காலக்ஷேமத்தை கவனித்தற் பொருட்டு அந்நாட்டிற் ஜனனமெடுக்கும் ஆண், பெண், சிசுக்க

ளிய சீரான சம்ரக்ஷணையும் சீரான பழக்கமும் எத்துணை ஆவசியமென அக்காலத்திற்றான் ஒவ்வொரு தேசத்திய அரசாங்கத்தாரும் பூரணமாயுணர்ந்தனர். எனவே அரசாங்கத்தார் ஒவ்வோர் தேசத்திலும் இவ்விஷயத்தில் மிகுந்ததோர் ஊக்கங்காட்டினர். தேசத்திலுள்ள ஆண், பெண் இருபாலர்க்கும் சரீரத்திடனும் மனஆரோக்கியமும் இன்றியமையாதனவென்ற வுண்மை அப்போது வெளிப்படையாயிற்று. ஆதலால் தத்தம் தேசமும்நாகரீகமும் க்ஷீணதசை அடையா வண்ணம்அதுகாறும் ஜனசமுகத்தினர் அசட்டை செய்துவந்த வேசையர்களையும் அவர்களது மக்களையுங் கூடப் பெரிதும் பாராட்டிவளர்க்கலானார்கள். பிரதி தேசத்திலும் பிறந்த குழந்தைகள் உடனே இறவாது தீர்க்காயுள்பெற்று நிற்கக்கூடிய பல சௌகரியங்களைக் குழந்தைகளின் தாய்மார்க்கு அளித்தனர். இக்காரியத்திற்கெனவே பொது விஷபங்களை யமைத்து கெர்ப்பண ஸ்திரீகள் பலரும் பிரசவகாலத்தில் அங்குவந்து தங்குதற்குரிய வசதிகள் பலவற்றையும் செய்தனர், இவையாவும் எதனைக்காண்பிக்கின்றன? ஜனசமுதாயத்தின் க்ஷேமத்திற்கு ஒவ்வொரு ஜீவனும் எத்துணையாவசியகமென்பதை காட்டவில்லையா?

3. மேலும் நியாயஸ்தலங்களில் குற்றவாளிகளென ருசிப்பிக்கப்பெற்று தண்டனையடைந்த கைதிகளும் அன்பிற்குரியாரென்றும் அவர்களை தண்டிப்பதினும் அவர்களது மனதை திருத்துவதே மென்மையென்றும் கருதியுழைக்கும் சங்கங்கள் பலவேற்பட்டுள்ளன. சிலதேசங்களில் அரசாங்கத்தாரே இவ்வுண்மையையறிந்து அவர்களை மீட்கவும் முயற்சிக்கவில்லையா? எக்காரியங்களிலும் அன்பெனும் சக்தியை செலுத்தி அதன் திறனால் பெருங் குறையுள்ளாரையும் திருத்துதல் சாத்தியம் என்ற வெண்ணம் விரைவிற்பரவிவருகின்ற இக்காலத்தின் பெருமையே பெருமை இதன் மாண்பே மாண்பு.!

மக்களைப்பெறுதலும் அவர்களைப் பழக்குதலும்.

4. குழந்தைகளைப் பழக்கும் முறையில் பண்டை நாள் முதலாய் நிகழ்ந்து வரும் கொடிய வழக்கங்களையா வேயொழித்து அன்பினாலும் பொறுமையினாலும் இடைவிடாததோர் உற்சாகத்தினாலும் பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் அவர்களைப்பழக்குவது அசாத்தியமன்று என்ற உண்மையைவித்தியார்த்திகள்பலரும் தற்போதுஒருவாக்கு உணர்ந்து வருகின்றனர். ஆண், பெண் என்ற இருபாலர்க்கும் உண்மைச்சுதந்திரம் எவ்விதம் இன்றியமையாததோ அதுபோலவே சிறுவர் சிறுமிகள் வளர்ச்சிக்கும்அஃது இன்றியமையாதது. சுதந்திரமென்பது ஒரு அலங்காரப் பொருளன்று ஆடம்பரத்திற்கென நாம் அணிந்து கொள்ளும் பொருளன்று. உயிர் வளர்தற்கு உணவும் நீரும்சுவாசமும் ஒளியும் ஆவசியகமேபோற் நமது ஜீவபரிபாகத்திற்கும் சுதந்தாமென்பதும் இல்லாமல் முடியாத பொருளாம் அஃது நமதுயிர்க்குயிராகும். இச்சுதந்தர கோஷம் பெரிது தற்காலத்தில் எங்ஙனம் முழங்குகின்றது. மக்களை வளர்க்கும் முறையில் இந்த வுயர்ந்த தத்துவத்தை எவ்விதம் அப்பியசிக்கலாமென்று ஓரளவு காட்டுதற்கே இவ்வியாசங்கள் எழுதப்பெறுகின்றன.

R. பஞ்சாப்கேசய்யர்,
கடம்பூர்.

அருளுடைமை.

(113ம் பக்கத்தொடர்ச்சி)

இவ்வுலகில் எவ்வளவு பேர் பொருளின்றிப் பரிதவிக்கின்றனர். பொருளில்லார்க்கு இவ்வுலகில்லையாகையால் அருளுடையாருக்குப் பொருளுமிருக்குமேல் அப்பொருளைக் கொண்டுதான் தானதருமங்களையியற்றி இம்மையில் அனேகருக்கு சுகத்தைக் கொடுத்து உதவலாம்.

அல்லது அருளான ஞானத்தின் மிகுதி படைத்தவனாயின் சாதக பக்ஷிகள்போல் அறிவைத்தேடுவோருக்குத் தனக்குத்தெரிந்ததைக் கற்பிக்கலாம். உலகில் உள்ள அறியாமையோ அளவில்லாதது அதை அகற்றுவதற்கு முன்வரும் ஊழியரோ இங்கு சிலர் ஆகையால் இவ்வுலகிலும் உழைக்கலாம்.

அருளுடையவன் தன் அருளை செலுத்த வழியின்றி வருந்தவேண்டியதில்லை. உள்ளிருக்கும் அருளேதான் செல்லும் வழியைத்தேடிக்கொள்ளும்.

நமது பிரஹ்மஞான நூற்களில் நம்முடைய விகாஸ முறையைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஜீவன் பூ புவர்ஸ்வர் லோகங்களில் பிரஜ்ஞையை அடைந்தால்தன்னுடைய உண்மையான தன்மையைவெளியர நன்றாக அடையப்பெறுகிறதாயும்சொல்லப்படுகிறது. ஞானலோகத்தில்அதாவது (Buddhic plane) என்ற லோகத்தில் பிரஜ்ஞையுடையவனாயிருக்கும்போது எல்லா ஜீவர்களும் ஒருதன்மையர் என்ற உணர்ச்சியானது தென்படுகிறதாம். வித்தியாசமே கிடையாதாம். எல்லோரும் வேற்றுமை பாவமின்றி இருப்பதாக அறியப்படுமாம். அதற்கும் மேலான லோகங்களுக்கு பிரஜ்ஞையானது எழ, எழ, பேதபுத்தியே அடியோடு தொலைந்துவிடுகின்றதாம், கடைசியில் தான் தன்னைத்தனியனாய்

எங்கும் நிறைந்து ஞானமயமாய், ஆனந்தகனமாய் தன்னைக்
காண்கிறானாம். வேறு ஒன்றும் அந்த நிலைமையில் கிடையா
தாம். அனுபவக் கிரந்தங்களாகிய (monad) முதலிய
நூல்களில் மிகவும் நன்றாக மேற்கூறிய அனுபவங்களை வர்
ணிக்கப்படுகின்றது. அவைகளைப்பற்றி இங்கு கூற முயல்
வது கூட என்னால் முடியாத காரியம். அப்படிச் செய்வ
தும் லக்ஷ்யமாகும் ஆனால் மேற்கூறியவற்றால் நாம் தெரிந்து
கொள்வதியாதெனில் மேலான பிரஜ்ஞையை அடைய
அடைய ஜீவர்களனைவரும் உண்மையில் உடன்பிறந்தவர்கள்
என்பதும் ஆகையால் வெகு நெருக்கமான சம்மந்தமுடை
யவர்என்பதும் ஒருவர் சுகம் பெற்றால் அதில் எல்லோருக்
கும் பாகம் உண்டு என்பதும் கண்கூடாக காணக்கிடைக்கி
டைக்கின்றது. ஆகவே அருளுடைமையானது அவசியமா
கின்றது. உண்மையில் எனக்கும் மற்றவருக்கும் சம்மந்த
மற்றிருந்தால் நான் மற்றவரிடம் அன்பைச் செலுத்தவேண்
டாம். ஆனால் வெகு நெருக்கமான சம்மந்தமிருக்கும்போ
து நம்சகோதரன் அறிவில்லை, சக்தியில்லை, ஆனந்தமில்லா
குறைந்து இருக்கும்போது நாம் எப்படி பூர்த்தியானவர்
ஆகமுடியும்? எல்லா பாத்திரங்களுக்கும் குழாய்கள் மூலம்
சம்மந்தம் இருக்கும்போது ஒன்றிற் பெய்த ஜலமானது
மற்ற பாத்திரங்களில் பாய்வதை தடுக்க இயலுமோ இய
லாது. ஆகையால்தான் மேலோர் அருளுடையவராய் விள
ங்குகின்றனர். ஆகையால் சதாரண மனிதர்களோ தான்
வேறு பிறர்வேறு என்று எண்ணியவராய் மேற்கூறிய குழா
ய்களை அடைத்துவிடுகின்றனர். ஆகையால்தான் நிறைந்
தால் போதும் மற்றவரைப்பற்றி எனக்கென்ன என்கின்ற
னர். ஆகையால்தான் இவ்வுலகில் ஒருவன் பணக்காரனா
யும், மற்றவன் பரமதரித்திரனாயும், ஒருவன் பூமியின் பெரு
மையும் உடையவனாயும், மற்றொருவன் ஒரு பிடி நிலம்
கூட இல்லாதவனாயும் இருப்பதைப்பார்க்கிறோம். ஆனால்
ஈசுவரனுடைய உத்தேசம் இதுவல்ல. இது அவருடைய
ஆஞ்ஞைக்குள்ளிருக்கிறது. ஆகையால் தான் உலகத்தில்

துன்பங்களும் கஷ்டங்களும் காணக்கிடக்கின்றன. "Thy will be done in Earth as it is in Heaven" என்று கிறிஸ்தவர்கள் பிரார்த்திக்கின்றனர். ஈசனுடைய உத்தேசத்தின் பிரகாரம் உலகத்தில் எல்லோரும் நடக்கவேண்டும் என்பது பிரார்த்தனை. எல்லோரும் சகோதரபாவத்துடன் ஒழுகினால், எல்லோரும் அருளுடனும், அன்புடனும், பழகினால சண்டைபேது சச்சரவேது, மாற்சரமேது எனக்கு உனக்கு என்றபோட்டியேது? உலகமானது மிகவும் சாந்தமான இடமாய்விடும். ஆனால் அங்ஙனம் உலகத்தை ஆகும்படி செய்வது ஈசுவர உத்தேசமாயினும் ஈசனைப்போன்ற தன்மையை உடைய ஜீவர்களை ஈசன் கட்டாயப்படுத்தமாட்டார் அவர்கள் வந்திரார்கள் அவர்களைக் கட்டாயப்படுத்தி சகோதரபாவத்தை அனுஷ்டிக்கும்படி செய்தல் இயலாது இயலினும் பயனற்றது. ஆகையால் உலகத்தில் பேதங்கள் சச்சரவுகள், எல்லாவற்றாலும் அனுபவம் கொண்டு, கடைசியில் சகோதரபாவம் தான் உண்மையென்று ஜீவர்கள் அறிகிறார்கள். அப்படி அறிந்தவர் தான் மேலோர். நாமும் ஒருவாறு இத்தன்மையை அதாவது சகோதர பாவத்தை கொஞ்சம் தூரப்பார்வையாய் அறிந்திருக்கிறோம் அதனால் தான் இந்த பிரஹ்மஞான சபையிற் சேர்ந்திருக்கிறோம். ஆகையால் நாம் அருளுடைமையைக் கொள்ள வேண்டியது கடமையாம்.

ஜீவன் விகாசமுறையில் முதலில் பிரவிருத்தி மார்க்கத்தில் செல்லுகிறான். அதாவது பூதவர்க்கம் முதற்கொண்டு கல் முதலிய ஸ்தாவர வர்க்கங்களிலும் புற்பூண்டு, மரம் செடியாகிய ஓஷதி வர்க்கங்களிலும், பிறகு மிருகவர்க்கத்திலும், பிறந்து, பின்னர் மிருகதன்மையுடைய மனிதனாய்ப் பிறந்து பிறகு நாகரீகமுள்ள மனிதனாக ஆகிறான். பல் கோடி ஜன்மங்களின் பிறகு நிவிருத்தி மார்க்கத்தில் பிரவேசிக்க ஆரம்பிக்கிறான். அப்படி பிரவேசிக்கும்போது தான் சகோதர பாவத்தை அதாவது ஒற்றுமையை அவலம்பிக்கி

றன் வேற்றுமை பாவம் குறைய ஆரம்பிக்கின்றது. அச்சமயம் தான் நமது பிரஹ்மஞான சபையைப்போன்ற சபைகளில சம்பந்தம் ஏற்படுகிறது. போட்டிபொல்லாங்குகளைக் குறைத்து, ஒற்றுமை சகோதரபாவம் இவைகளை அதிகரிக்க முயல்கின்ற சங்கங்கள் எல்லாம் ஸத்வங்கள். அவையனைத்தும் மேற்கூறிய தன்மை ஆகையால்நம்சபைபோன்ற சபைகளிற்சேர்ந்தவர்நிவிருத்தி மார்க்கத்தில்நன்னோக்கையுடையோராவார்.

திருவள்ளுவநாயனாரும் நிவிருத்தி மார்க்கமாய் துறவாத்தைப்பற்றிப் பாடும்போது அம்மார்க்கத்திற்கு புகுபவன் அடையவேண்டிய சம்பத்துக்களின் தலைமையில் அருளுடைமையை வைக்கின்றார், அவ்வாறு அருளுடைமையை விரதமாகக்கொண்டவனுக்கு நரகபாதைகள் கிடையாதென்று சொல்லவும் வேண்டுமோ.

"அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை
யிருள்சேர்ந்த வின்னா வுலகம் புகல்."

ஏன் அவ்வாறு நரகம் புகார் என்றால் நரகம் புகற்கு வேண்டிய தீவினையை அவர் இயற்றார் ஆகையினால்.

மன்னுயிர் ஓம்பி யருள் வளர்க்கில் லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.

இதற்கு சாட்சியம்யார் எனின் உலகத்தில் அருள் புரிந்தார் எப்போதும் நன்மையையே அடைவதும் அவர்கட்கு கேடுவரமாட்டாதென்று நாம் அநுபவத்திற் கண்டனால்

அல்லல் அருள்வாக்கு இல்லை வளிவழங்கு
மல்லன் மாஞானம் கரி,

என்றார் நாயனார். ஆகையால் செல்வங்களுக்குள் எல்

லாம் செல்வமாகிய அருட்செல்வத்தை அடைவோமாக. அதற்காக நாம் முயல்வோமாக. அப்படி அடைந்தால் அவ்வுலகம் என்ற மேல நாடு நமக்கு நிச்சயம் சித்திக்கும் அருள் இல்லார்க்கோ அவ்வுலகம் நிச்சயமாய் கிடையாது.

இது உத்பிரேக்ஷையல்ல. சுபாவ சக்தியே. ஏனெனில் பூ, புவர், சுவர் லோகங்களுக்கப்பால் உள்ள மகர், ஜன லோகங்களில் ஒரு ஜீவன் பிரஜ்ஞை உடையவனாய் இருக்க வேண்டுமாயின், அந்தலோக திரவியத்தை அவன் இஷ்டப்படி சலிக்கச்செய்யும் தேர்ச்சியுடையவனாய் இருத்தல் வேண்டும் அப்படிப்பட்ட தேர்ச்சியுடையவனாயிருந்தால் தான் அவன் திவ்விய உலகங்களில் பிரஜ்ஞையுடையவனாவான், சகோதரபாவம், ஒற்றுமை, அருளாண்மையாகிய இவை எல்லாம் அவ்வுயர்லோகத்தின் இயல்பு. வேற்றுமை, விரோதம், முதலிய குணங்கள் அந்த உத்தமலோகங்களில் கிடையா ஆகையால் நாம் அருள் என்ற உத்தம குணத்தையுடையவராய் இருக்கிறோம். என்றால் நம்முடைய சூட்சும சரீரத்தில் அதாவது புத்தி தத்துவத்தில் சலனம் ஏற்படுகிறது. நாம்மகாஜனலோகங்களிலும் பிரஜ்ஞை உடையவராயிருக்கிறோம் என்றும் அர்த்தம். ஆகையால அருளுண்டானால் தான் நாம் அவ்வுலகம் செல்ல இயலும்.

அருள் இல்லாமல் ஒருவன் அறம் இயற்றினும், அதன் பயன் நிலையற்றதாகும். அதாவது ஞானமில்லாதவன் ஒருக்கால் மெய்ப்பொருளை உணர்வானாயினும் அவ்வுணர்ச்சி சீக்கிரம் மறைந்து நிலையிலுள்ள ஞானம் உண்டாகாது போல அருள் இன்றி ஒருவன் தர்மம செய்தாலும நிலையுள்ள பயனுள்ளதாயாகாது.

தெருளாதவன் மெய்ப்பொருள் காண்டல் தான்தேரின்
அருளாதான் செய்யும் அறம்.

அவதார புருஷர்கள் எல்லோரும் அருள்வடிவமாய் விளங்குகின்றனர். ஸ்ரீராமன் அரக்கரால் வாட்டப்பட்ட

ரிஷிகளுக்கு அபயபத்ரத்தைக்கொடுத்து ரக்ஷித்ததும், நம்பிராட்டியைக்கவர்ந்த இராவணன் தம்பியாகிய விபீஷணனுக்கு சரணம் கொடுத்தும், இராவணனே சரணம் புகுந்தால் அவனையும் கூடரக்ஷிப்பேனென்று திருவாக்களித்ததும், ஸீதாபிராட்டிதன்னை மிரட்டியுருட்டிவாட்டிய அரக்கியருக்கு மனமிரங்கியதும் யாவரும் அறிவார்கள். ஆகையாய் ஸ்ரீராமனுக்கு ஒருவரும் விரோதிகள் அல்லர். எல்லோரும் மித்திரர்கள். ஆனால் ராவணன் முதலானோர் அஜ்ஞான வந்தகாரங்களால் மூடப்பட்டு காமக்குரோதங்களின் வசப்பட்டு தர்மத்துக்கு விரோதமான தீச்செயல்களை இயற்றிய அதனால் தான் அவ்விராவணன் முதலானோரைக் கொன்றார் என்று ஏற்படுகிறது. அப்படிக்கொன்ற போழ்து கூட அவ்வாத்மாவேரில் கோபம் கொண்டவரல்ல. அருளின் பெருக்கத்தாலேயே அவர் இங்ஙனம் செய்தாரெனக்கூறப்படுகின்றது. ஆகையால் நாம் அருளைப் பெருக்குவோமாக ஜயம்!!

ஆர். ரெங்கசாமி அய்யர்.

பாளி.

M. S. சுந்தர சர்மா B. A.,

நியுயார்க் என்ற நகரத்தின் துறைமுகத்தில் 'சுயற்சிசிலை' என்று 105 அடி உயரமுள்ள ஓர் சிற்பம் நிறுத்தியிருப்பதை அநேகர் அறிவார்கள் அமெரிக்கர்கள் தாம் இவ்வுலகத்தில் நிறுத்திய சுயற்சியின் ஞாபகக்குறிப்பாக அச்சிலையை நாட்டியிருக்கின்றனர் என்றும் அநேகர் அறிவார்கள். இப்படி மானிடர்கள் தம்தம் காலத்தில் அதிக விசேஷமாய் நடக்கும் வைபவங்களை உலகம் மறக்காமலிருக்கும் பொருட்டு வெகுகாலம் நீடிக்கக்கூடிய பொருள்களால் ஓர் ஞாபகக்குறியை ஏற்படுத்துவது வெகுசகஜமாக வழங்குகிறது,

அப்படி ஏற்படுத்திய ஞாபகக்குறிப்புகள் உண்மையில் எதைக் குறிக்கின்றதோ அதை நினைப்பூட்டுகின்றதா என்பது அவைகளைச் செய்தவர்களின் புத்திசாதுரியத்தையும் அக்காலத்திலுள்ள தொழிலாளிகளின் சாமர்த்தியத்தையும் பொருத்தது. சமீப காலத்தில் நமது மதுரையில் கூடபெருமைதங்கிய விக்டோரியா ராணி அவர்களுடையவும் அவரது புத்திரரான எட்வேர்டு சக்கிரவர்த்தியினுடையவும் ஞாபகார்த்தமாய் ஓர் நகரகூடம் ஏற்படுத்தியிருக்கிறார்கள், ஆனால் அதைக்கண்டமாத்திரத்தில் எதற்காக ஏற்பட்டதோ அதை நினைப்பூட்டுகின்றதா வென்பதுதான் தெரியவில்லை. அப்படியிருப்பது நமது புத்திக் குறைவை காட்டுகிறதேயன்றி வேறொன்றுமில்லை.

நமது நகரகூடம் போலல்லாமல் வாஸ்தவத்தில் அக்கக் காலத்தில் நடந்தவைகளைக் குறிக்கும் ஞாபகக்குறிப்புகள் நமது உலகத்தில் பலவிடங்களில் சிதறியிருப்பதாகத் தெரிகிறது.

"உலகத்திலுள்ள தேசங்கள்" என்ற புஸ்தகத்தில் அதின் கர்த்தா ராபர்ட் ப்ரௌன் என்பவர் 4 ஆம் பாகத்தில் 43 ஆம் பக்கத்தில் பின்வருமாறு கூறுகின்றனர்:—

"திபி, ராப-நூயி அல்லது ஈஸ்டர் தீவு என்பது தென் அமெரிக்காவிலிருந்து 2000 மைலுக்கப்பாலுள்ள ஓர் துண்டான தீபகற்பம்..................12 மையில் நீளமும் 4 மைல் அகலமுமுள்ளது.

ஆனால், அத்தீபத்திற்கு இப்பொழுது செல்லும் பிரயாணிகளை பிரமிக்கச்செய்யும் அங்குள்ள கற்சிலைகளை யார் செய்தார்களென்று ஒருவரும் அறியார்கள். இப்பொழுது அங்கு குடியிருப்பவர்கள் அத்தீபத்திற்குவருவதற்கு முன்பே அவைகள் அங்கிருந்திருக்கவேண்டும்............அச்சிலைகளின் வேலைப்பாடு மிக அற்புதமானது............கூக் என்பவர் அத்தீபத்திற்குச் சென்றபொழுது 27 அடி உயரமும் 8 அடி அகலமுமுள்ள அச்சிலைகளில் சில கீழே விழுந்து கிடந்தது; சில நின்றபடியேகாணப்பட்டது. அப்படியுள்ள

ஒன்றின் நிழலில் 30 ஜனங்கள் தங்கியிருக்க இடங்கொடுத்து இப்பிரமாண்ட சிலைகளின் பீடம் 30 முதல் 40 அடி நீளமும் 12 முதல் 16 அடி அகலமும் உள்ளது.......... எல்லாம் ஒரே கல்லில் அடிக்கப்பட்டுள்ளது.........."

"சாரங்கட்டி சிறிது சிறிதாக கட்டப்பட்டதென்பதற்கு கொஞ்சம்கூட ருஜா இருப்பதாக தெரியவில்லை"

இப்பெரும் சிலைகளில் ஒன்று லண்டன் நகரில் சிற்பசாலையில் கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கிறதாம்.

பின்னும் மத்திய ஆசியாவில் காபூல் நகரத்திற்கும் பாக் நகரத்திற்கும் மத்தியில் கோபிபாபா என்னும் மலையின் அடிவாரத்தில் பாமியன் என்று பெயர் பூண்ட ஓர் பாழ்நகரமிருக்கிறது. ட்ஜூல்ஜூல் என்ற ஓர் நகரத்தின் பாகமாயிருந்தது 13ன்றும் நூற்றாண்டில் செங்கிஸ்கானால் அழிக்கப்பட்டது. அவ்விடத்திற்கு போய்வந்த பிரயாணிகளெல்லோரும் உலகத்தில் இருக்கும் சிலைகளிலெல்லாம் மிகப்பெரிதாயுளது அவ்விடத்தில்தான் இருப்பதாகச் சொல்லுகிறார்கள்

அவைகளில் மிகப்பெரிதாகவுளது 173 அடி உயரமாம் நியூயார்க்கிலுள்ள சிலையைக்காட்டிலும் 70 அடி உயரமுள்ளது. இரண்டாவது சிலை 120 அடி உயரமிருக்கிறதாம், மூன்றாவது சிலை 60 அடி உயரமிருக்கிறதாம்.

பௌத்தர்கள் சென்றவிடமெல்லாம் விஹாரங்கள் ஏற்படுத்திய காலத்தில் இவ்விடத்திலும் விஹாரங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இச்சிலைகளை புத்தரது சிலையென்று சொல்லிக்கொண்டார்கள். ஆனால் பௌத்தர்களுக்கு முன்பே அச்சிலைகள் ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும், அப்பௌத்தர்கள் அச்சிலைகளின் ஆடை முதலியவற்றை மாத்திரம் சேர்த்தார்களென்றும், நன்றாய் ஆராய்ச்சி செய்த டால்பாட் அவர்கள் எழுதியிருக்கிறார்.

நமது காலத்திற் பிறந்த உலகெங்கும் பிரசித்தி பெற்ற ஒரு பெரும் பிரம்பஞானி இச்சிலைகளை உலகசரித்திரத்தையும், உலகத்தில் மானிடப் பிறப்பையும் விளக்க ஓர் முக்கிய சாஸனங்களாக இவ்வுலகை வியாபித்த ஆதிகாலமனிதர்கள் நமக்கு அளித்துப் போனவைகளென்று உறுதியாகச் சொல்லுகின்றார். நமக்கும் அதுவாஸ்தவமென்றேபடுகிறது

ஏனெனில் நமது இந்திய தேசத்தில் இம்மாதிரியான ஞாபகக்குறிப்புகள் அநேகம் உள. அவைகளிலிருந்து நமது தேச சரித்திரத்தை வெகு இலகுமாய் அறியலாமென்பது மிகவும் உண்மையானது. ஆனால் இக்காலத்தில் சரித்திரமென்று சொல்லி, எழுதுபவரின் இஷ்டத்திற்கேற்ற மனிதர்களுடைய கதையை மட்டும் கூறும் சரித்திரத்தை நாம் தெரிந்துகொள்ள முடியாது. யுகக்கணக்காய் இருந்து யுகக்கணக்காய் இருக்கப்போகிற உலகத்திற்கு பானிபட் சண்டையில் யார் ஜெயித்தாலென்ன யார் தோற்றாலென்ன

ஆர்க்காட்டு முற்றுகையில் இந்தியர்கள் தாங்கள் கஞ்சியை மட்டும் குடிக்கிறோம் என்றாலென்ன? ராபர்ட்கிளைவு இந்தியாவில் அபகரித்த பணத்தைக்கொண்டு தன் ஊர் சேர்ந்து ஒரே நாளில் 200 குடுத்துணி தைத்துக்கொண்டாலென்ன? 300 குடுத்துணி தைத்துக்கொண்டாலென்ன? இப்பரதகண்டத்தில் ஜனித்து நமது சரீரம் அநித்யம் நாம் நித்யம், எத்தனை ஜென்மங்களை நாம் எடுத்தோம் இனியும் எத்தனையோ ஜென்மங்களை நாம் எடுக்க நேரிடும் என்று அறிந்த நம்மவர்களுக்கு இவ்விதமான இக்காலத்தில் நடைபெறும் சரித்திரம் தேவையில்லை. அது வாஸ்தவத்தில் சரித்திரமுமாகாது. உண்மையான இந்திய தேசசரித்திரத்தை ஒரே வரியில் சொல்லலாம் ஒரேபடத்தில் காட்டலாம்; ஒரே சிலையில் சிறப்பிக்கலாம். அப்படியே நமது முன்னோர்கள் செய்திருக்கிறார்கள்.

மேல்நாட்டார், மதமென்றும், சரித்திரமென்றும் சாஸ்

திரமென்றும், ராஜ்ஜிய பரிபாலனம் என்றும் மானிட செய்கைகளை வெவ்வேருகப் பிரித்திருப்பதுபோல் நம்மவர்கள் பிரிக்கவில்லை. எல்லாச்செய்கைகளும் நம்மவருக்கு ஒன்றுதான். அகில அண்டங்களையும் அளித்தருளும் அந்த கண்ணபிரான் பொருட்டே தம்முடைய செயல்களைச் செய்கிருர்கள். ஆகையால் நமது நாட்டில் மேல்நாட்டாருக்குப்போல் பேதம் கிடையாது. நமக்கு மதமென்றாலும் சரித்திரமென்ருலும் ஒன்றுதான். இவ்வாறு கலைத்தினுதவியால்த்தான் நம்முன்னேர் நமது தேச சரித்திரத்தை ஓரே சிலைரூபமாக நமக்கு அளித்திருக்கிருர்கள்.

மேல்நாட்டுச் சரித்திரக்காரர்களும், அவர் உதவியால் அறிந்த நமது தேசத்திலுள்ள சரித்திரக்காரர்களும், இச்சிலையிருப்பதையறியாமல், இந்தியாவில் சுபமான சரித்திரக்காரர்கள் இல்லையென்று சொல்லுகிருர்கள். அப்படிச் சொல்லுபவர்கள், கண்ணை மூடிக்கொண்டு உலகமிருட்டு என்று எண்ணும் பூனையை ஒத்தவராவார்கள்.

அவர்கள் அனைவரும் கண்ணை விழித்துக் கொண்டு நமது தேசத்தில் ஆங்காங்கு காணும் யாளிச்சிற்பங்களை நன்ருய் பார்ப்பார்களேயாகின் அவரது அஞ்ஞானம் விடியும் அவர்கொண்ட எண்ணத்தையும் மாற்றிக்கொள்வார்கள். அவதூறான வாக்குகளையுமுபயோகப்படுத்தமாட்டார்கள்.

நேசர்காள்! நமது நாட்டிலுள்ள யாளிச்சிற்பங்களை ஏதோ தொழிலாளிகள் மனேபாவமாய் கற்பித்தடித்தவை என்று எண்ணங்கொண்டிருப்பதை விட்டு அதை நன்ருய் ஆராய்ந்து நோக்கி அதினால் வெளிவரும் பூர்வ சரித்திரத்தை அறியமுயல்வீர்களென்று நம்புகிறேன்.

அவதாரங்கள்.

(29 ம் பக்கத்தொடர்ச்சி)

பகவான் பசியாயிருப்பதைபார்த்து ஸகியாதவர்களாய் உடனே தாங்கள் பிரியத்தோடு கொண்டுவந்த ஆகாரத்தை பகவானுக்குக் கொடுத்தார்கள். அவரும் ஆனந்தத்துடன் அதைச்சாப்பிட்டார். ஆனால் எதையும் ஆலோசித்துப்பார்க்காமல் தோஷங்களை கல்பித்து தூஷிக்கும் சுபாவமுடையவர்கள், அந்தஸ்திரீகள் தங்களுடைய புருஷர்களை மீறி நடந்தார்கள்; தங்களுடைய புருஷர்களையும்பந்துக்களையும் கைவிட்டார்கள் தங்கள் வீடுவாசல்களை விட்டுவிட்டுவந்தார்கள்; புருஷர்களையும்வீடுவாசல்களையும் விட்டு விட்டு பகவானாகிய கிருஷ்ணரைப் பின்தொடர்வது எவ்வளவு பிசகானகாரியம்? என்று அந்தஸ்திரீகளை தூஷிக்கிறார்கள். அவர்களுக்கு கிருஷ்ணபகவான்பேரிலிருந்தப்ரேமையெல்லாம் ஸ்தூலதேகத்தைப்பற்றினதேயென்று அவர்கள் பாவிக்கிறார்கள். அப்படிப்பட்ட களங்கமானப்ரேமை ஏழு வயதுள்ள ஓர் குழந்தையினிடத்தில் யாருக்காவது உண்டாகுமா? பகவான் கூப்பிடும்பொழுது ஸகலத்தையும்வீடு வாசல், பெண்டுபிள்ளைகள் எல்லாவற்றையும் துறந்து விடலாமென்று கற்பிக்காத மதம் ஒன்றுமில்லை. கிருஷ்ணபகவானை இயேசுகிறிஸ்துக்கு ஒப்பிட்டு பார்ப்பதுண்டு. ஜீஸஸ் க்ரைஸ்ட் களங்கமற்றவர் என்றும் கிருஷ்ணபகவான் களங்கமுள்ளவர் என்றும் சில சில ஆதாரங்களைக் கொண்டுவருவதுண்டு. பகவானிடத்தில் சென்று அவரோடுவிளையாடுவதற்காக பர்த்தாக்களை அவர்கள் விட்டு விட்டு அவர்கள் ஓடினார்கள் என்று அந்தஸ்திரீகளை தூஷிப்பதுண்டு ஆனால் இயேசு கிறிஸ்து வாக்கிலிருந்தே சில சில வார்த்தைகள் வந்திருக்கின்றன எவனொருவன் தாய்த்தகப்பன்மகர்களை என்னைவிட அதிகமாய் நேசிக்கிறானோ, அவன் எனக்கு சிஷ்யனாவதற்கு யோக்கியனன்று. எவனொருவன் தன் புத்திரனையாவது, அல்லது புத்திரியையாவது என்னை நேசிப்பதை விட அதிகமாய் நேசிக்கிறானோ அவன் எனக்கு சிஷ்யனாகயோகிக்

யனன்று; எவனெவன் தன் வீடுவாசல்களையும் ஸகோதரர்களையும் ஸகோதரிகளையும் தாய் தகப்பன்மார்களையும், பெண்டுபிள்ளைகளையும் பூஸ்திதியையும் பணம் காசையும் எனக்காக விட்டுவிடுகிறானோ இவைகளை விட நூறு மடங்கு அதிகமான தனத்தை அவர்கள் பெறுவார்கள் கடைசியில் நித்தியமான பதவியையும் வாழ்க்கையையும் அவர்கள் அடைவார்கள் எவன் என்னிடத்தில் வந்துவிட்டு தன் பெற்றோர்களையும் பெண்ஜாதியையும் தன் குழந்தைகளையும் ஸகோதரர்களையும் தன வாழ்க்கையையும் வெறுக்காமலிருக்கிறானோ அவன் எனக்கு சிஷ்யனாயிருக்கமுடியாது. இவைகளின் கருத்தும் பகவானிடத்தில் கோபிகைகளும் ப்ராஹ்மண ஸ்திரீகளும் சென்றதின் கருத்தும் ஒன்றே. ஜீஸஸ் கூப்பிடும் பொழுது, பர்த்தா, பாரியை, தாய்தகப்பன் இவர்களைக் கைவிடவேண்டும் அதற்கு வெகுமதி நித்தியமான வாழ்கை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து விஷயத்தில் செய்தால் மாத்திரம் சரியான காரியமாயிருப்பானேன், அதே காரியம், கிருஷ்ண பகவான் விஷயத்தில் செய்யப்பட்டால், பிசகான காரியமாகப்படுவானேன்,

இரண்டுமதத்திலும் ஒரே உபதேசந்தான் காணப்படுகிறது. ஆனால் வேறு எந்தமதத்திலும், ஸ்தூலப்ரேமையை வெளிப்படுத்தும்படியான வார்த்தைகள், பகவானுக்கும் ஜீவனுக்குமுள்ள ஸம்பந்தத்தைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு உபயோகபபட்டிருப்பதுண்டு. (Song of Solomon) என்ற விஷயத்தை உதாரணமாக எடுத்துக்கொள்வோம்: (Bible லிலும் Song of Christ for his Church) என்று ஒரு விஷயம் சொல்லவ்பட்டிருப்பதைப் பார்க்கலாம். அதில் ஸ்தூலப்ரேமையை வெளிப்படுத்தும்படியான சிங்காரரஸம் பொருந்திய அநேக அற்புதமான வர்ணனைகள் காணப்படும் ஆனால் இதை அந்த மதத்துக்குச் சேர்ந்தவர்கள் களங்கமுள்ளதாக பாவிப்பதில்லை. அப்படியிருக்கும் பொழுது ஹிந்துமதத்திலுள்ள இப்படிப்பட்ட வர்ணனைகள் களங்கமுள்ளவைகளாகத் தோன்றுவானேன். மகமதிய மதத்தி

லும் (Song of Sufis) என்று ஒன்றிருக்கிறது. ஜீவனுக்கு பகவானிடத்திலுள்ள ப்ரேமையை, நாயகிக்கு நாயகனிடத்திலுள்ளப்ரேமைக்கு ஒப்பிட்டு, அப்படிப்பட்ட ஸிங்கார வர்ணனைகளால் பரிபாஷையாகச் சொல்வதுண்டு. எந்தக் காலத்திலும் பகவானுக்கும் பக்தர்களுக்குமுள்ள ஸம்பந்தத்துக்கும் ப்ரேமைக்கும் ஒப்பிடுவது வழக்கம். ஏனென்றால் நாயகனுக்கும் நாயகிக்குமுள்ள சம்மந்தம் மாதிரி அவ்வளவு நெருக்கமான ஸம்மந்தம் வேறு எந்த மனிதர்கள் விஷயத்திலுமில்லை. அதைவிட அதிகமாய் நெருங்கின சம்பந்தமும் அதைவிட அதிக விசேஷமான ப்ரேமையும் வேறொன்றில்லை பகவான்களுக்கும் பக்தர்களுக்கும் அப்படிப்பட்ட நெருங்கின ஸம்மந்தமும்; அப்படிப்பட்டப்ரேமை யாம்.

பகவான் நாயகனுக்கும் பக்தர்கள் நாயகிக்கும் எந்த காலத்திலும் ஒப்பிடுவது வழக்கம். இது எந்தக்காலத்திலும் எந்த இடத்திலும் உண்மையாகவே யிருக்கிறது. இது தான் கிருஷ்ணபகவானுடைய அற்புதமானலீலைகளின் தாத்பர்யம்.

இருபதாவது நூற்றாண்டுவரையில் பகவானுடைய இந்தலீலைகள் ஜனங்களிடத்தில பக்தியையே உண்டுபண்ணின. மேற்குதேசத்து எண்ணங்களும் நாகரீகமும் இந்தியாவுக்குவந்தபிறகுதான், அற்பபுத்தியைத்தெரிவிக்கும்படியான முட்டாள்த்தனமான தூஷணைகள் பகவானைப் பற்றி செய்யப்பட்டு வருகின்றன. தற்காலத்து ஜனங்களுக்கு யோக்கியதை யில்லாத பாகவத புராணத்தை ரிஷிகள் மறந்திருந்தாலும் தேவலைபோல தோன்றுகிறது. வேதங்களிலுள்ள அநேக பாகங்களை அவர்கள் மறைத்ததுபோல் தூஷணையில்லாமலும் களங்கமில்லாமலும் ஜனங்கள் வாசிப்பதற்கு யோக்கிதை வரும் வரையில், கிருஷ்ண பகவானுடைய அற்புதமான லீலைகளைப்பற்றிய கதைகளை ரிஷிகள்எடுத்து மறைத்துவிடுவது ரொம்பவும் நலம் என்றுபடுகிறது.

அடுத்தபடி பகவான் துஷ்ட நிக்கிரகம் பண்ணினதைப்பற்றி கவனிப்போம். ரொம்பவும் சிறுகுழந்தையாயிருக்கும்பொழுதே, பூதனை என்ற ராக்ஷஸியைக் கொன்றார் இந்தமாதிரியாக கம்ஸனை ஸம்ஹரிக்கிற வரையில், சுற்றுப்புறங்களிலுள்ள துஷ்டஜெந்துக்களை பால்யபருவத்திலேயே ஸம்கரித்தார். கோகுலத்தைவிட்டு கிருஷ்ணபகவானும் பலராமரும் புறப்பட்டு கம்ஸனை ஸம்ஹரிப்பதற்காக யுத்தகளத்தில் வரும்பொழுதும் இரண்டு பேர்களும் பையன்களாகவே காணப்பட்டார்கள். லீலைகளெல்லாம் முடிந்து சண்டைக்குப்போகிற பொழுதும் பாலர்களாகவே விருந்தார்கள். அப்பொழுது முதல்கொண்டு, ஜீவகோடிகளுடைய விகலத்துக்கு எதிரிடையாய் வேலைசெய்து கொண்டிருந்த துஷ்டர்களை ஒவ்வொன்றாக ஸம்ஹரித்துக் கொண்டு வந்தார்

அவருடைய மந்திரித்துவ (Statesmanship) த்தைப் பற்றி இப்பொழுது கவனிப்போம். அவருடைய அவதாரத்தில் முக்கியமான விஷயங்களுக்குள் இது ஒன்று. லௌகிக வ்யவஹாரத்திலும் ராஜ்ஜீயவ்யவகாரங்களிலும் அவருக்கிருந்த தேர்ச்சியையும் சாமர்த்தியத்தையும் குறிக்கிறது. பாண்டவர்கள் விஷயமாய் அவருக்கிருந்த வ்யவகாரங்கள் மூலமாய் இது வெளிப்படுகிறது. ஒவ்வொரு கஷ்டதிசையிலும் கிருஷ்ணபகவானதான தூதனாகப்போவது வழக்கம். அர்ஜுனனோடும் பீமசேனனோடும் அவர்தான் ஜராஸந்தனைக் கொல்வதற்காகச் சென்றார். க்ஷத்திரியர்கள் அனுஷ்டிக்க வேண்டிய தர்மத்துக்கு விரோதமாய் யுத்தமானது நடக்காமலிருக்கும் பொருட்டு, தானே பாண்டவர்கள் விஷயமாய் துரியோதனனிடத்திற்குத் தூதனாகச் சென்றார் துரியோதனனிடத்திற்குத் தூதனாகச் சென்று யுத்தம் நடக்காமலிருப்பதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் செய்கிறார், தன்னாலியன்றளவு தன் புகழத்தக்க வாக்கை உபயோகப்படுத்துகிறார். எந்த விதத்திலும் துரி

யோதனனை ஸமாதானப் படுத்துவது ஸாத்தியமில்லையென்
று தெரிந்தபிறகுதான், கடைசியாக யுத்தம் நடந்தே தீர
வேண்டுமென்று தீர்மானம் பண்ணிக்கொள்ளுகிறார். இப்
படிப்பட்ட விஷயங்களிலெல்லாம் அவருடைய சாதுர்யமும்
அபார சக்தியும் அபார புத்தியும் அபார பொறுமையும், ரா
ஜ்ஜிய வ்யவஹாரங்களிருக்கவேண்டிய தேர்ச்சியும் எதிரிகளி
டத்தில் நடந்துகொள்ளவேண்டிய கிரமமும் நமக்கு வெளி
ப்படுகின்றன இப்படிப்பட்ட எதிரியிடத்தில் நடந்து கொ
ண்டகாலத்திலும் பொறுமையையும் சாந்தத்தையும் அமை
தியையும் மனநிதானத்தையும் பெருந்தன்மையையும் அவர்
கைவிடவில்லை. ஆனாலும், துரியோதனனால் செய்யப்பட்ட
உபகாரத்தை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. அவனுடைய
வீட்டில் சாப்பிடுவதற்கு அவர் சம்மதிக்கவில்லை. விதுரரு
டைய சாப்பாடுதான் பரமபவித்ரமாகவும் அன்போடு கூடி
னதாகவும் அவருக்குப் பட்டது. ஏனென்றால், அந்த ஆகா
ரந்தான் ஸாத்விகமானது; பரமபவித்ரமானது; ஏனென்
றால் புசிக்க யோக்கியமானது என்று பகவானே சொல்லுகி
றார் அவர் துரியோதனனுடைய ஸபையிலிருந்த துஷ்டரா
ஜாக்களெல்லோரையும் சாந்தப்படுத்தினதையும் ஸமாதா
னப்படுத்தினதையும் பாருங்கள் எவ்வளவு பொறுமையோ
டும் சாந்தத்தோடும் அந்த சமயத்தில் அவர் பேசுகிறார் என்றும்
பாருங்கள். எப்படிப்பட்ட மிருதுவான வார்த்தைகளால் அவர்
களுடைய கோபத்தையும் தணித்து அவர்களுடைய மனஸ்ஸு
ளிரும்படியாகச் செய்வதற்கு தனனுடைய வாக்குசாதுரியத
தை உபயோகப்படுத்துகிறார் என்று பாருங்கள் கடைசியில் குரு
க்ஷேத்திரயுத்தம் நடந்தபிறகு, திருதராஷ்டர மஹாராஜா
வினுடைய புத்ரர்கள் எல்லோரும மடிந்தபிறகு, பிள்ளை
களையிழந்த திருதராஷ்டிரனிடத்திலும் அவருடைய பத்தினி
யிடத்திலும் அவர்களுடைய கோபம் தன்பேரில்தாக்கட்டும்

(இன்னும் வரும்)

படங்களுடன் கூடிய கதைகள்.

விர்லாபம்—அல்லது நட்பின் மேன்மை		0—2—0
சிவாஜி மஹாராஜ்	} ஆர். எஸ். நாராயணசாமி	0—2—0
குமணராஜன —	} ஐயர் பி. ஏ. பி. எல்.	0—2—0

அரிய ஞானக் களஞ்சியங்கள்.

புஸ்தகங்கள் ஒவ்வொன்றும் 1 அணா.

விக்கிரஹாராதனை	மகாலயபக்ஷமும் நவராத்திரியும்
லோககுருவின் அவதாரங்கள்	ஸ்ரீ தேவாபி மஹாகுருநாதர்
ஹிந்து என்பவன் எவன்	தசாவதாரங்களின் உண்மை
காயத்திரி	எண்ணங்களின் ரகசியம்
காயத்திரி ராமாயணம்	திருப்பள்ளி எழுச்சி-செய்யுள்.
சகோதரத்வம்	லோககுருவாகிய பரமன் வருவானேன்

நம் குழந்தைகளும் நம்தேசத்துக்கு வருங்கால மகிமையும்.
மகா. விஜயகத்திர சக்ரவர்த்தியவர்களின் பட்டாபிஷேகம்.

புஸ்தகங்கள் ஒவ்வொன்றும் இரண்டணா.

சன்மார்க்க முறையில் ஹிதோபதேசம்
தியானத்தால் உள்ள பிரயோஜனங்கள்
சர்வசமயத்தைப்பற்றியும் ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றியும் சம்பாஷணை

மரணபயம் வேண்டாம்.	ஞானமார்க்கதீபம்
சத்குரு பாதங்களில்.	சந்தியா வந்தனம்

புஸ்தகங்கள் ஒவ்வொன்றும் மூன்றணா.

(1) என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளடாது.
(2) ஸ்தூல பிரபஞ்ச தர்மங்கள்—ஆத்ம தர்மங்கள்
(3) மோக்ஷம் அல்லது வீடு பெறல்
(4) ஸன்மார்க்க முறையும் ஸம்ஸாரமும்
(5) ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள்
(6) நமது பெரும் துரவஸ்தை
(7) கர்மநாசம் (8) சின்னங்கள் (9) கர்மம்

(10) குழந்தைகளை பழக்கும் முறையில் ஜாக்கிரதை பெற்றிருக்க வேண்டிய சுருக்கமான விஷயங்கள்.

தபால் சார்ஜ் வேறு.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்
மதராஸ்.

ஜகப்பிரசித்திபெற்ற

ஜிண்டான் மாத்திரை

எண்ணிலாக்குணங்கள் நிரம்பிய இந்த ஜிண்டானை இப்போதே உபயோகியுங்கள். எல்லாக் காலத்திலும் யாவராலுமே நன்கு மதிக்கப்பெற்ற நாடெங்கும் பரவி பலபல வியாதிகளுக் கண்டிதமும் ஆரோக்கியத்திற்கும் ஆனந்தந்தரும் கைகண்ட முக்கியவிசேஷ குளிகைகள். இன்புளுயென்சா முதலிய கொடிய தொத்து வியாதிகள் அணுக வொட்டாமல் தடுப்பதற்கு இம் மாத்திரைகள் மிகவும் குணமானவைகள்.

யாவரும் சுலபத்தில் அடையவேண்டி எல்லாக் கடைகளிலும் வியாபாரிகளிடத்திலும் எப்போதுமே விசாரிக்கப் பெறலாம். விலையோ சரசம்.

265 மாத்திரையும் கண்ணாடி பதித்த அந்தமான டப்பியுள்ள பாக்கெட் ரூ. 1. 75 மாத்திரையும் சாதா டப்பியுடன் பாக்கெட்டுக்கு 4 அணா. 15 மாத்திரை பொட்டணம் 1 அணா.

ஹோல் ஏஜண்டுகள்:—

எல். வைத்தியா அண்டு கோ,

மதராஸ்.

பிராஞ்சுகள்:—திருச்சிக்கோட்டை & பங்களூர் ஸிடி. & கொழும்பு

N. B. கை குடும்ப மருந்துகள், பேடெண்டுகள் டாபிலட்கள், பாலாமிருதம், மேலான பன்னீர், பல்பொடி, கூந்தல் தைலம், இங்கோ எஸ்ஸென்ஸ், பித்தளை மெழுகு வத்திஸ்டாண்டுகள், முதலிய பலவகை சுதேசிய சாமான்களுக்கும் ஏஜண்டுகள்

எங்கள் மதுரை ஏஜண்டு:—

V. சின்னகிருஷ்ண நாயுடு,

ஸ்ரீகிருஷ்ண ராஜா அண்டு கோ, மேலக்கோபுர [illegible]ரை,